©
தமிழ்நாடு அரசு
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 3.20 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 21] சென்னை, புதன்கிழமை, மே 24, 2017
வைகாசி 10, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழில் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 39, தொழில் (எம்.எம்.சி.2) துறை, 4 ஏப்ரல் 2017.]*

சுரங்கங்கள் மற்றும் கனிமப்பொருட்கள் (மேம்படுத்துதலும் முறைப்படுத்துதலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 67/1957) 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) மற்றும் (1–A) ஆம் உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு சிறு கனிமப்பொருட்கள் சலுகை விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,–

(1) 19 ஆம் விதியின், (2) துணை விதியில், பகுதி (a) க்குப் பதிலாக பின்வரும் பகுதிகள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அவையாவன:–

(a) சேம்பர் சூளையில் உள்ள அல்லது நாட்டு செங்கல் சூளையில் உள்ள ஒவ்வொரு செங்கல் தயாரிப்புப் பிரிவும், செங்கல் தயாரிப்பதற்கான களிமண்ணை பூமியிலிருந்து வெட்டி எடுப்பதற்கான அனுமதியைப் பெறும் செயல் நோக்கத்திற்காக, சேம்பர் சூளையாக இருக்கும் நேர்வில் 3,000/– ரூபாய் பதிவு கட்டணமாகவும், நாட்டு செங்கற் சூளையாக இருக்கும் நேர்வில் 300/– ரூபாய் பதிவுக் கட்டணமாகவும், மாவட்ட கருவூலத்தில் செலுத்தப்பட்ட செலுத்துச் சீட்டு இந்த விதிகளின் பிற்சேர்க்கை IV-A இன், படிவம் IV இல் பதிவு செய்வதற்காக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பம் பெற்றுக்கொண்டதன் பேரில், மாவட்ட ஆட்சியர், இந்த விதிகளில் பிற்சேர்க்கை IV-A இன், படிவம் V இல் பதிவு செய்ததற்கான சான்றிதழ் ஒன்றை வழங்குவார். பதிவு செய்ததற்கான சான்றிதழ் மூன்று ஆண்டுகளுக்கு செல்திறன் மிக்கதாகும். பதிவுக் கட்டணத்தில் 50 விழுக்காட்டை செலுத்தி மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும்.

(aa) ஒவ்வொரு செங்கல் தயாரிப்புப் பிரிவும், செங்கல் தயாரிப்பதற்கான களிமண்ணை பூமியிலிருந்து வெட்டி எடுப்பதற்கான அனுமதி வேண்டி பிற்சேர்க்கை IV-A இன் படிவம்–I இல் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழின் நகல், செங்கல் தயாரிப்பதற்கான களிமண்ணை வெட்டி எடுப்பதற்கு கருதப்பட்ட நிலத்தின் பட்டாவை வைத்திருப்பவரிடமிருந்து பெறப்பட்ட இசைவுக் கடிதம், திரும்பப் பெற இயலாத 1,500/– ரூபாய்க்கான (ரூபாய். ஆயிரத்து ஐநூறு மட்டும்) பதிவுக் கட்டணம், செலுத்துச் சீட்டு வாயிலாக மாவட்டக் கருவூலத்தில், கீழே குறிப்பிடப்பட்ட வீதத்தில் செலுத்தப்பட்ட செங்கல் கனிமப்பொருட்கள் ஆண்டுக் கட்டணம் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

(i) 16 சேம்பர்கள் வரை உள்ள சூளைக்கு – ஆண்டொன்றுக்கு ஒரு சூளைக்கு ரூபாய். 60,000/–(ரூபாய் அறுபதாயிரம் மட்டும்)

(ii) 17 மற்றும் அதற்கு மேற்பட்டு ஆனால் 26 சேம்பர்களுக்கு மிகாமல் உள்ள சூளைக்கு ஆண்டொன்றுக்கு ஒரு சூளைக்கு ரூபாய். 75,000/– (ரூபாய். எழுபத்தைந்தாயிரம் மட்டும்)

(iii) 27 மற்றும் அதற்கு மேற்பட்ட சேம்பர்கள் உள்ள சூளைக்கு–

(ஆண்டொன்றுக்கு ஒரு சூளைக்கு ரூபாய். 90,000/– (ரூபாய். தொண்ணூறாயிரம் மட்டும்)

(iv) தீயிடுவதற்கான 15 துளைகள் வரையுள்ள நாட்டு செங்கற் சூளைக்கு – ஆண்டொன்றுக்கு ஒரு சூளைக்கு ரூபாய். 10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)

(v) தீயிடுவதற்கான 15 துளைகளுக்கு மேற்பட்டு உள்ள நாட்டு செங்கற் சூளைக்கு – ஆண்டொன்றுக்கு ஒரு சூளைக்கு ரூபாய். 12,000/– (ரூபாய் பன்னிரண்டாயிரம் மட்டும்)

(2) இணைப்பு IV-A யில், படிவம் III க்கு பின்பு, பின்வரும் படிவங்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அவையாவன:–

## படிவம் IV

*[19(2) (a)ஆம் விதியைக் காண்க.]*

## செங்கல் சூளையை பதிவு செய்வதற்கான விண்ணப்பம்.

படிவம்

பெறுநர்

மாவட்ட ஆட்சியர்,

................................

ஐயா,

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு கனிமவள சலுகை விதிகளின் 19 ஆம் விதியைச் சேர்ந்து (2) துணை விதியின் கீழ், (a) பகுதியின் கீழ், இந்த விண்ணப்பத்தை நான்/நாங்கள் அளிக்கின்றோம்.

(2) எனக்கு/எங்களுக்கு செங்கல் சூளைக்கான பதிவு சான்றிதழை வழங்குமாறு நான்/நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

(3) தேவையான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(i) விண்ணப்பதாரரின் பெயர், முழு முகவரியுடன் :

(ii) பதிவு கட்டணம் செலுத்தியதற்கான செலுத்து சீட்டின் விவரங்கள்:

(iii) பதிவு சான்றிதழ் கோரப்படும் செங்கல் சூளையின் அமைவிடம்:

| *வட்டம்* | *கிராமம்* | *நில அளவை எண்* |
|---|---|---|
| | | |

(iv) செங்கல் சூளையிலுள்ள அறைகள்/ தீயிடுவதற்கான துளைகளின் எண்ணிக்கை :

(v) விண்ணப்பதாரர் அளிக்க விரும்புகின்ற ஏனைய யாதொரு தகவல் :

மேலே குறிப்பிட்ட விவரங்கள் சரியானவையெனவும், மாவட்ட ஆட்சியரால் கோரப்படும் ஏனைய யாதொரு விவரங்களை அளிக்க நான்/நாங்கள் தயாராக உள்ளோம் எனவும் இதனால் நான்/நாங்கள் உறுதியளிக்கிறோம்.

இடம்:

*தங்கள் உண்மையுள்ள,*

நாள் :

***(விண்ணப்பதாரரின் கையொப்பம்)***

**படிவம் V**

*[19(2) (a) ஆம் விதியைக் காண்க.]*

**செங்கல் சூளைக்கான பதிவுச் சான்றிதழ்.**

நடப்பு கோப்பு எண் : மாவட்டம் : ...............................

நாள் : ........................................

பட்டா நிலங்களிலிருந்து மட்டும் செங்கல்களுக்காக மண்ணை வெட்டி எடுப்பதற்காக, அனுமதி பெறும் நோக்கத்திற்காக திரு/திருவாளர்/திருமதி.................................க்கு சொந்தமான செங்கல் சூளை பதிவு செய்யப்பட்டுள்ளது/புதுப்பிக்கப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

**1.** செங்கல் சூளையின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

(a) அறை/செங்கல் சூளையின் அமைவிடம் : (i) வட்டம் :

(ii) கிராமம் :

(iii) நில அளவை எண் :

(b) அறைகள்/தீயிடுவதற்கான துளைகளின் எண்ணிக்கை :

**2.** தற்போது செய்யப்பட்டுள்ள பதிவு/புதுப்பித்தல், அவை வழங்கப்படும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு செல்திறனுடையதாக இருக்கும்.

இடம்: **மாவட்ட ஆட்சியர்.**

நாள் :

(அலுவலக முத்திரை)

**அதுல்யா மிஸ்ரா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்.*
*தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை,*

## தொழில் (MMC.1) துறை

*[அரசாணை (நிலை) எண் 50 தொழில் (MMC.1) துறை, 27 ஏப்ரல் 2017.]*

1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்படுத்தலும் முறைப்படுத்தலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 67/1957), 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (1), (1–A) ஆகிய உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு சிறு கனிம சலுகை விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன விதிகளின், 12 ஆம் விதியில்.–

1. (2) ஆம் துணை விதிக்குப் பதிலாக, பின்வரும் துணை விதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது.–

"2(a) இந்த விதிகளில் என்ன சொல்லியிருப்பினும், பொதுப்பணித் துறை அல்லது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் மாநிலத்திலுள்ள (சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்கள் நீங்கலாக) குளங்கள்,

வாய்க்கால்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் படுகைகளிலிருந்து களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் சரளைக் கற்களை வெட்டி எடுப்பதற்காக, நேர்விற்கேற்ப, பொதுப்பணித்துறையின் செயற் பொறியாளர் அல்லது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களின் செயற் பொறியாளர், குளங்கள், வாய்க்கால்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் பட்டியலைத் தயாரித்து, தகுதி வாய்ந்த பகுதிகளை வரையறை செய்து, குளங்கள், வாய்க்கால்கள், நீர்த்தேக்கங்களிலிருந்து அத்தகைய கனிமத்தை வெட்டி எடுப்பதற்கு, வரையறுக்கப்பட வேண்டிய நிபந்தனைகளுடன் ஒவ்வொரு பகுதியிலும் அகற்றப்பட வேண்டிய அத்தகைய கனிமத்தின் மதிப்பீட்டளவுடன், குளங்கள், வாய்க்கால்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் படுகைகளிலிருந்து களிமண், வண்டல்மண், சவுடு மற்றும் சரளைக் கற்களை அகற்றுவதற்காக, அவர்களின் செயற்குறிப்பை மாவட்ட ஆட்சியரிடம் வழங்க வேண்டும். மாவட்ட ஆட்சியர், மேற்சொன்ன பட்டியலை, மாவட்ட அரசிதழில், அறிவிக்கையிட வேண்டும்.

(b) பானைகள் செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள யாதொரு நபர் அல்லது பானைகள் தயாரிப்பதற்காக தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற யாதொரு பதிவு பெற்ற பானைகள் தயாரிக்கும் தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கம், உண்மையான வீட்டு பயன்பாட்டு செயல் நோக்கத்திற்காக பொது மக்களும், வேளாண் செயல் நோக்கத்திற்காக உழவர்களும் வெட்டியெடுப்பதற்காக, மாவட்ட ஆட்சியரிடமிருந்து அனுமதி பெற்றபின், இந்த விதியின் கீழ் மாவட்ட அரசிதழில் மாவட்ட ஆட்சியரால் அறிவிக்கையிடப்படுகிற, பொதுப்பணித் துறை அல்லது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள குளங்கள், வாய்க்கால்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் படுகைகளிலிருந்து, கட்டணமின்றி, களிமண் வண்டல் மண், சவுடு மற்றும் சரளைக் கற்களை வெட்டியெடுப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

ஆனால், சம்பந்தப்பட்ட நபரின் வசிப்பிடம் அல்லது வேளாண் நிலமும், வெட்டியெடுக்கப்பட வேண்டிய இடமும் அதே வருவாய் கிராமத்தில் அல்லது அடுத்துள்ள வருவாய் கிராமத்தில் இருக்க வேண்டும். வேளாண் செயல் நோக்கத்திற்காக யாதொரு நபரும் மேற்சொன்ன கனிமங்களை வெட்டி எடுப்பதற்கு, அவர்களது பெயரில் நிலங்கள் உள்ளன அல்லது அடங்கல் பதிவேட்டின்படி பயிர் செய்பவர் என்று கிராம நிருவாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்றிதழை அளிக்க வேண்டும்.

மேலும், வேளாண்மை நோக்கத்திற்காக, குளங்கள், வாய்க்கால்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் படுகைகளிலிருந்து வெட்டியெடுப்பதற்கு கருதப்படும் வண்டல்மண் மற்றும் களிமண்ணின் அளவானது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நஞ்சை நிலங்களை பொறுத்தவரையில் ஏக்கர் ஒன்றுக்கு 75 கியூபிக் மீட்டர் (ஹெக்டர் ஒன்றுக்கு 185 கியூபிக் மீட்டர்) மற்றும் புஞ்சை நிலங்களை பொறுத்தவரையில் ஏக்கர் ஒன்றுக்கு 90 கியூபிக் மீட்டர் (ஹெக்டர் ஒன்றுக்கு 222 கியூபிக் மீட்டர்) அளவிற்கு மிகாமல் இருக்க வேண்டும் ஏனைய வீட்டு பயன்களுக்கு வெட்டியெடுப்பதற்கு கருதப்படும் சவுடு மற்றும் சரளைகற்களின் அளவானது, 30 கியூபிக் மீட்டர் அளவிற்கு மிகாமல் இருக்க வேண்டும் பானைகளை செய்வதற்கு வெட்டியெடுப்பதற்கு கருதப்படும் களிமண்ணின் அளவானது, 60 கியூபிக் மீட்டர் அளவிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

மேலும் குளங்கள், வாய்க்கால்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் படுகைகளிலிருந்து அத்தகைய அளவு கனிமத்தை வெட்டியெடுப்பதற்கு மாவட்ட ஆட்சியரிடமிருந்து முன் அனுமதி பெற வேண்டும். அத்தகைய அனுமதி கால அளவு 20 நாட்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

மேலும், நேர்விற்கேற்ப பொதுப் பணித் துறை அல்லது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் துறையால் வரையறுக்கப்பட்ட பகுதிகளில் மட்டுமே கனிமங்களை வெட்டியெடுக்க அனுமதி வழங்கப்பட வேண்டும் மற்றும் நேர்விற்கேற்ப பொதுப் பணித் துறை அல்லது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் துறையில் விண்ணப்பித்தவர்கள் கொண்டு வரும் வாகனங்களில் மட்டுமே கனிமங்கள் ஏற்றப்பட வேண்டும்.

(இ) இந்த நிலங்களிலிருந்து கனிமங்கள் வெட்டியெடுக்கப்படுவது கீழ்காணும் வரையறைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். அதாவது:—

(i) குழிகளுக்கு இடையேயான தொலைவு, அடியிலிருந்து அளக்கும் போது கிடைக்கும் கரையின் உயரத்திற்கு இரு மடங்கிற்குக் குறையாமல் இருக்க வேண்டும். மேலும் குழிகளின் ஆழம் ஒரு மீட்டர் அளவிற்கு மிகாமல் இருக்க வேண்டும். (ஒரு மீட்டர் ஆழம் கொண்ட குழிகள், நுண்துளைகளையுடைய பாறை அடுக்குகளை வெளிப்படுத்துவதாக இருப்பின், ஆழமானது ஒரு மீட்டருக்கும் குறைவாக இருத்தல் வேண்டும்);

(ii) குளக்கரையானது அங்கீகரிக்கப்பட்ட சாலையாக அல்லது வண்டிப்பாதையாக இருந்தாலன்றி, கரை நெடுக களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் சரளைக் கற்களை ஏற்றக்கூடாது.

(iii) கடந்து செல்வதற்காகக் கரைகளை வெட்டக்கூடாது.

(iv) வெட்டியெடுக்கப்பட்ட களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் சரளைக் கற்களை குளத்தின் படுகைகள், மதகு அல்லது குளங்களின் ஏனைய யாதொரு கட்டுமானங்கள் மற்றும் தரைப்பாலங்கள் அல்லது கரைகளின் சரிவுகளில் குவித்து வைக்கக் கூடாது மற்றும்

(v) வண்டிகளும் கட்டைவண்டிகளும் குளங்களின் அணைசுவர், மதகு அல்லது குளங்களின் ஏனைய கட்டுமானங்களின் யாதொரு பகுதியை இடித்து, அவற்றை சேதப்படுத்தக் கூடாது;

**2.** (2-A) துணை விதியின் (a) பகுதியில் "**30 கியூபிக் மீட்டர்**" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "**222 கியூபிக் மீட்டர்**" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**அதுல்யா மிஸ்ரா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்*
*(மொழிபெயர்ப்பு) துறை.*

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

## அறிவிக்கைகள்

*[அரசாணை (நிலை) எண் 61, தொழிலாளர் மற்றும் வேலைகேவாய்ப்பு (M2)த் துறை, 3 ஏப்ரல் 2017.]*

**1948** ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 63/1948) **112**ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு **1950** ஆம் ஆண்டு தொழிற்சாலை விதிகளில் கீழ்க்காணும் திருத்தத்தை இதனால் செய்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் **115** ஆம் பிரிவில் கோரியுள்ளவாறு முன்னரே வெளியிடப்பட்டுள்ளது.

### திருத்தங்கள்

மேற்சொன்ன விதியில் **84***A* விதிக்குப் பின்னர் கீழ்க்காணும் விதி சேர்த்துக்கொள்ளப்படும்.; அதாவது;—

**84***B* இரவு நேர முறை மாற்றுப்பணிகளில் பெண்களைப் பணியமர்த்துவதற்கான வழிகாட்டிக் குறிப்புகள்.— **(1)** அனுபோகதாரருடைய தொழிற்சாலையில் பாலியல் வன்கொடுமைச் செயல்கள் நடைபெறுவதைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது அந்தத் தொழிற்சாலையின் அனுபோகதாரரின் கடமையாக இருக்கும்;

**(2)** தொழிற்சாலை ஒன்றின் அனுபோகதாரர் ஒருவர், தொழிற்சாலையிலேயே புகார் அமைப்பு ஒன்றை வைத்து வர வேண்டும். புகார் குழு ஒன்றை அமைப்பதன் மூலம் புகார்களை, மிகவும் கமுக்கத்தனமையுடன் குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்வு செய்ய வேண்டும். இக்குழு, பாலியல் வன்கொடுமை பிரச்சினைகளை நன்கு அறிந்துள்ள பெண் தலைவர் ஒருவரையும், உறுப்பினர்களையும் கொண்டிருக்கும். அரசு சாராத அமைப்பு ஒன்றின் பிரதிநிதியுடன், இக்குழுவின் உறுப்பினர்களில் பாதியளவு எண்ணிக்கைக்குக் குறையாதவர்கள் பெண்களாக இருக்க வேண்டும்.

**(3)** பெண் தொழிலாளர்கள், தொழிலாளர்கள் கூட்டத்தில் பாலியல் வன்கொடுமைப் பிரச்சனையை எழுப்புவதற்கு அனுமதிக்கப்படுவர்;

**(4)** தொழிற்சாலை ஒன்றின் அனுபோகதாரர் ஒருவர், பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட பெண் தொழிலாளர்களுக்கு உதவி செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**(5)** தொழிற்சாலை ஒன்றின் அனுபோகதாரர் ஒருவர், தொழிற்சாலைக்கு உள்ளேயும், வெளியேயும், உரிய விளக்கு வசதிகளை செய்து தர வேண்டும்.

**(6)** தொழிற்சாலை ஒன்றின் அனுபோகதாரர் ஒருவர், இரவு நேர முறைமாற்றுப் பணியில், பெண் தொழிலாளர்கள் பத்து எண்ணிக்கைக்குக் குறையாமல் இருப்பதையும், தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கு எண்ணிக்கைக்கு குறையாமல் இருப்பதையும், மேற்பார்வையாளர்/முறை மாற்றுப் பணிக்கு பொறுப்பு வகிப்பவர்/முதலாள் ஆகியோரில் மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கையினர் பெண்களாக இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

**(7)** தொழிற்சாலை ஒன்றின் அனுபோகதாரர் ஒருவர், இரவு நேர முறைமாற்றுப் பணிகளில் பணியமர்த்தப்பட வேண்டிய பெண் தொழிலாளர்களுக்காக தொழிற்சாலையின் நுழைவு வாயிலிலும், வெளியேறும் இடங்களிலும், போதிய அளவு பெண்களின் பாதுகாப்பிற்கும், போதிய பணி கொட்டகைகளுக்கும் வகை செய்யய வேண்டும்;

**(8)** தொழிற்சாலை ஒன்றின் அனுபோகதாரர் ஒருவர், இரவு நேர முறை மாற்றுப் பணிகளில் பணி புரிகிற பெண்களுக்கு தனி உணவருந்தும் வசதியையும், தொழிற்சாலை வளாகத்திலிருந்து பெண் பணியாளர்களின் குடியிருப்புக்கு அருகிலுள்ள இடத்தை சென்றடைவதற்கு பாதுகாப்பான தனி போக்குவரத்து வசதியையும் வகைசெய்ய வேண்டும்.

**(9)** தொழிற்சாலை ஒன்றின் அனுபோகதாரர் ஒருவர், தேவையான மருத்துவ வசதிகளையும் வகை செய்ய வேண்டும், தேவையான தொலைபேசி இணைப்பு வசதிகளை வகைசெய்வதன் மூலம், காயம் ஏற்படுகிற போது அல்லது இடைநிகழ் வன்கொடுமை செயல் நிகழ்கிற போது, நெருக்கடி ஏற்படுகிற எந்தவொரு சமயத்திலும் இந்த வசதிகள் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

**(10)** தொழிற்சாலை ஒன்றின் அனுபோகதாரர் ஒருவர், தொழிற்சாலை பெண் தொழிலாளர்களுக்கான உணவு வசதி மற்றும் தங்குமிட வசதியை வகைசெய்கிறவிடத்து, அதனை பெண் தொழிலாளர்களுக்கென்றே பராமரித்து வர வேண்டும். அது விடுதி பெண் காவலர்கள் அல்லது பெண் மேற்பார்வையாளர்கள் கட்டுபாட்டின் கீழ் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

**(11)** தொழிற்சாலை ஒன்றின் அனுபோகதாரர் ஒருவர், பெண் பணியாளர் ஒருவர் பகல் நேர முறைமாற்று பணியிலிருந்து இரவு நேர முறைமாற்றுப்பணிக்கு மாற்றப்படுகிற போதும், இரவு நேர முறைமாற்றுப்பணியிலிருந்து பகல் நேர முறை மாற்றுப்பணிக்கு மாற்றப்படுகிற போதும், கடைசி முறை மாற்றுப்பணிக்கும் இரவு நேரமுறை மாற்றுப்பணிக்குமிடையே தொடர்ச்சியாக பன்னிரண்டு மணிநேரத்திற்கும் குறையாத ஓய்வு நேரம் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்;

**(12)** தொழிற்சாலை ஒன்றின் அனுபோகதாரர் ஒருவர், இரவு நேர முறைமாற்றுப்பணி ஒன்றுக்கு, இரண்டு பெண் தொழிலாளர்களுக்குக் குறையாமல் நியமிக்க வேண்டும். அவர் தொழிற்சாலையில் சுற்றி வந்து, சிறப்பு நல உதவியாளர்களாகப் பணியாற்ற வேண்டும்.

**(13)** விரும்பத்தகாத சம்பவங்கள் ஏதேனும் ஏற்படுகிற போது, தொழிற்சாலை ஒன்றின் அனுபோகதாரர் ஒருவர், தொழிற்சாலைகள் ஆய்வாளருக்கும், சம்பந்தப்பட்ட காவல்நிலையத்திற்கும் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டும்.

**(14)** தொழிற்சாலை ஒன்றின் அனுபோகதாரர் ஒருவர், இந்த வழிகாட்டிக் குறிப்புகளை அனைவருக்கும் நன்கு தெரியக்சுடிய இடமொன்றில் காட்சிப்படுத்த வேண்டும்;

**(15)** தண்ணீர் வசதியுடன் போதிய கழிப்பிட வசதியை பெண் தொழிலாளர்களுக்கு வகைசெய்ய வேண்டும். இது, பெண் தொழிலாளர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் வசதியான இடத்தில் அமைக்கப்பட்டு எளிதில் அணுகத்தக்கதாக இருக்க வேண்டும்;

**(16)** அவசியம் ஏற்படுகிறவிடங்களில், பெண் தொழிலாளர்கள் தங்களுடைய குழந்தைகளை கவனிப்பதற்காக, மேற்பார்வைப் பொறுப்பாளருடன் அனைத்து இன்றியமையாத வசதிகளுடன் குழந்தைகள் காப்பக வசதியை, பெண் தொழிலாளர்களுக்கு வகை செய்ய வேண்டும்.

**பி. அமுதா,**
*அரசு செயலாளர்.*

**(தமிழாக்கம்)**

**ந. அருள்**,
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 74, தொழிலாளர் – வேலைவாய்ப்பு (K2)த் துறை, 20 ஏப்ரல் 2017.]*

**1966** ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் **32/1966**), **44**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** மற்றும் **(2)** உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு **1968** ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள்) விதிகளில் செய்யக் கருதியுள்ள திருத்தங்களுக்கான பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் **44**ஆம் பிரிவைச் சேர்ந்த **(3)** உட்பிரிவின் பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த வரைவு திருத்தங்கள், *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று திங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின் அவற்றை, சென்னை–**600 006**–இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக, அரசு செயலாளர், தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–**600 009** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவு திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்,—

(1) விதி 8, துணை விதி (1) இல் உள்ள "அட்டவணை" க்குப்பதிலாக பின்வரும் "அட்டவணை" அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்; அதாவது:—

### "அட்டவணை"

| *தொடர் எண்.* | | *மின்சக்தியால் இயங்கும் இயந்திரம் பயன்படுத்தப்படுகின்ற தொழிலக வளாகங்களுக்கான கட்டணங்கள்* | *மின்சக்தியால் இயங்கும் இயந்திரம் பயன்படுத்தப்படாத தொழிலக வளாகங்களுக்கான கட்டணங்கள்* |
|---|---|---|---|
| | | *(1)* | *(2)* |
| | | *ரூ.* | *ரூ.* |
| | நிதியாண்டின் யாதொரு நாளில் எண்ணற்ற தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுவதற்குக் கருதப்படுமாயின், உரிமம் தேவைப்படுபவர்களின் அல்லது புதுப்பிக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை வருமாறு;— | | |
| (அ) | பத்திற்கு மிகாமல் | 210 | 135 |
| (ஆ) | பத்திற்கு மேற்பட்டு ஆனால் இருபதுக்கு மிகாமல் | 405 | 270 |
| (இ) | இருபதுக்கு மேற்பட்டு ஆனால் ஐம்பதிற்கு மிகாமல் | 1080 | 675 |
| (ஈ) | ஐம்பதிற்கு மேற்பட்டு ஆனால் நூறுக்கு மிகாமல் | 2025 | 1350 |
| (உ) | நூறுக்கு மேற்பட்டு ஆனால் இருநூற்று ஐம்பதற்கு மிகாமல் | 4050 | 3375 |
| (ஊ) | இருநூற்று ஐம்பதிற்கும் மேற்பட்டு | 7425 | 6750 |

(2) 8ஆம் விதியைச் சேர்ந்த, துணை விதி (2)இல், "ரூபாய் பதினைந்து" என்னும் பதிவுக்குப் பதிலாக "நாற்பத்தைந்து ரூபாய்" என்னும்" பதிவு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(3) 8ஆம் விதியைச்சேர்ந்த, துணை விதி (3)இல்,

(3) 8ஆம் விதியைச்சேர்ந்த, துணை விதி (3)இல்,

(அ) பகுதி (a) யில், "ரூபாய் இருபத்தைந்து" என்னும் பதிவுக்குப் பதிலாக "ரூபாய் எழுபத்தைந்து" என்னும் பதிவு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(ஆ) பகுதி (b) யில், "ரூபாய் பதினைந்து" என்னும் பதிவுக்குப் பதிலாக "ரூபாய் நாற்பத்தைந்து" என்னும் பதிவு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(4) 10ஆம் விதியில் வருகிற, துணை விதி (3) இல் "முப்பது ரூபாய்", என்னும் பதிவிற்குப் பதிலாக "ரூபாய் தொன்னூறு" என்னும் பதிவு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**பி. அமுதா,**
*அரசு செயலாளர்.*

**(தமிழாக்கம்)**

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.